செ.வெ.எண்.139 நாள்:03.03.2018

## பத்திரிக்கை செய்தி

**திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள கல்குவாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் குத்தகை உரிமம் வழங்குதல்- மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிக்கை**

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள கீழ்காணும் 23 சாதாரண கல்குவாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சுய உதவி குழுக்கள் (SGSY) மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் சங்கங்களுக்கு நேரடியாக குத்தகை உரிமம் வழங்கும் பொருட்டு விண்ணப்பங்கள் 2018-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6-ஆம் தேதி மாலை 5.00 மணி வரை வரவேற்கப்படுவதாக தெரிவித்து திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 2, நாள். 26.02.2018 ___ல் அறிவிக்கை மற்றும் திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 3, நாள். 01.03.2018-ல் திருத்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வட்டம் | கிராமம் | புல எண் | மொத்த பரப்பு (ஹெக்டேர்) | குத்தகைக்கு விடும் பரப்பு (ஹெகடேர்) | நில வகைபாடு | குவாரியின் தன்மை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருவேங்கடம் | தெற்கு குருவிகுளம் | 158 (பகுதி) | 1.66.5 | 1.26.0 | கல்குவாரி | பழையது |
| 2 | இராதாபுரம் | பணகுடி | 279 (பகுதி) பிளாக்- 1 | 5.74.5 | 2.02.5 | தீ.ஏ.த | பழையது |
| 3 | இராதாபுரம் | பணகுடி | 279 ((பகுதி) பிளாக்- 2 | 5.74.5 | 3.72.0 | தீ.ஏ.த | புதியது |
| 4 | இராதாபுரம் | கருங்குளம் | 769 (பகுதி) பிளாக்- 3 | 54.89.0 | 2.50.0 | தீ.ஏ.த | பழையது |
| 5 | இராதாபுரம் | கருங்குளம் | 769 (பகுதி) பிளாக்- 4 | 54.89.0 | 2.50.0 | தீ.ஏ.த | பழையது |
| 6 | இராதாபுரம் | கருங்குளம் | 769 (பகுதி) பிளாக் - 5 | 54.89.0 | 5.00.0 | தீ.ஏ.த | புதியது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | இராதாபுரம் | கருங்குளம் | 779 (பகுதி) பிளாக் - 4 | 10.91.5 | 5.00.0 | தீ.ஏ.த | புதியது |
| 8 | இராதாபுரம் | பழவூர் - 1 | 927 (பகுதி) பிளாக் - 1 | 29.95.0 | 5.00.0 | அரச முத்து பிள்ளை மலை | புதியது |
| 9 | இராதாபுரம் | பழவூர் - 1 | 927 (பகுதி) பிளாக் - 2 | 29.95.0 | 5.00.0 | அரச முத்து பிள்ளை மலை | புதியது |
| 10 | இராதாபுரம் | பழவூர் - 1 | 1112 (பகுதி) | 1.62.5 | 1.40.0 | பொத்தை | புதியது |
| 11 | இராதாபுரம் | லெவிஞ்சி புரம் | 1054 | 2.25.0 | 2.25.0 | பாறை | புதியது |
| 12 | இராதாபுரம் | லெவிஞ்சி புரம் | 1279 (பகுதி) | 2.40.5 | 1.21.5 | தீ.ஏ.த | புதியது |
| 13 | இராதாபுரம் | பெருங்குடி | 1397 ((பகுதி) பிளாக் - 1 | 12.59.5 | 3.82.0 | தீ.ஏ.த | பழையது |
| 14 | இராதாபுரம் | பெருங்குடி | 1397 (பகுதி) பிளாக் - 2 | 12.59.5 | 4.00.0 | தீ.ஏ.த | பழையது |
| 15 | இராதாபுரம் | பெருங்குடி | 1397 (பகுதி) பிளாக் - 3 | 12.59.5 | 3.66.0 | தீ.ஏ.த | பழையது |
| 16 | இராதாபுரம் | வடக்கு வள்ளியூர் - 2 | 1881 | 3.72.0 | 3.72.0 | கல்லாங் குத்து | பழையது |
| 17 | அம்பா சமுத்திரம் | மன்னார் கோவில் | 301/1A3 (பகுதி) பிளாக் - 1 | 87.26.0 | 5.00.0 | மலை | பழையது |
| 18 | அம்பா சமுத்திரம் | மன்னார் கோவில் | 301/1A3 (பகுதி) பிளாக் - 2 | 87.26.0 | 5.00.0 | மலை | பழையது |
| 19 | ஆலங்குளம் | மருதம் புத்தூர் - 2 | 160/3 (பகுதி) | 2.97.5 | 2.59.0 | பாறை | பழையது |
| 20 | ஆலங்குளம் | காவலாக் குறிச்சி | 32/1 | 1.22.0 | 1.22.0 | குன்று | பழையது |
| 21 | வீரகேரளம் புதூர் | பலபத்திர ராமபுரம் | 369/3 | 1.23.5 | 1.23.5 | பாறை | பழையது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | வீரகேரளம் புதூர் | ஆணை குளம் | 303 (பகுதி) | 3.62.0 | 3.10.0 | பாறை | பழையது |
| 23 | வீரகேரளம் புதூர் | வடக்கு காவலக் குறிச்சி | 405 (பகுதி) | 2.36.0 | 1.10.0 | பாறை | பழையது |

2) திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கை மற்றும் திருத்த அறிவிக்கை தொடர்புடைய சார் ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி ஆணையர் ஆகியோரது அலுவலகங்களில் அறிவிப்பு பலகைகளில் ஒட்டி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

3) எனவே, தகுதிவாய்ந்த பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சுய உதவி குழுக்கள் (SGSY) மற்றும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் சங்கங்கள் மேற்காணும் கல்குவாரிகளுக்கு குத்தகை உரிமம் பெறுவதற்காக விண்ணப்பக் கட்டணம் ரூ.500/- ஐ உரிய தலைப்பில் செலுத்தி அசல் செலுத்துச் சீட்டு மற்றும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை 06.03.2018 மாலை 5.00 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெறிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.